1. “விளையாட்டு” இலக்கணக்குறிப்பு தருக.
   அ) வினைப்பெயர் ஆ) தொழிற்பெயர் இ) பொருட்பெயர் ஈ) காலப்பெயர்
2. இங்கிலாந்து நாட்டின் விக்டோரியா மகாராணி காலையில் எழுந்தாதும் படிக்கும் நூல்
   அ) திருவாசகம் ஆ) திருமந்திரம் இ) திருக்குறள் ஈ) திருவள்ளுமாலை
3. தமிழ்மொழியில் நமக்கு கிடைத்துள்ள மிகப்பழமையான நூல்?
   அ) அகத்தியம் ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) நன்னூல்
4. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. உயிர்க்குறில் | - | 1. ½ | | அ) | 1 | 2 | 3 | 4 |
| b. உயிர்நெடில் | - | 2. 1 | | ஆ) | 2 | 3 | 4 | 1 |
| c. மெய் | - | 3. 3 | | இ) | 2 | 4 | 1 | 3 |
| d. உயிரளபெடை | - | 4. 2 | | ஈ) | 1 | 3 | 4 | 2 |

5. உயிரன எழுத்துக்களும், இடையின எழுத்துக்களும் பிறக்கும் இடம் எது?
   அ) கழுத்து ஆ) மார்பு இ) மூக்கு ஈ) தலை
6. ஒற்றளபெடையில் அளபெடுக்கும் மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை
   அ) 10 ஆ) 16 இ) 11 ஈ) 18
7. “தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை” என்று கூறியவர் யார்?
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) சுரதா
8. யாருடைய கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன.
   அ) கவிமணி ஆ) பாரதியார் இ) நாமக்கல் கவிஞர் ஈ) கலியாணசுந்தரம்
9. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடியாகத் தோன்றுவது .................... ஆகும்
   அ) இடைப் பகாப்பதம் ஆ) உரிப்பகாப்பதம் இ) வினைப் பகாப்பதம் ஈ) பெயர்ப் பகாப்பதம்
10. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
   அ) 8 ஆ) 16 இ) 32 ஈ) 35
11. “வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும் போரில் சிறந்து பொலிவாகும்” - என்று பாடியவர் யார்?
   அ) காளமேகப்புலவர் ஆ) வள்ளலார் இ) பெ.சுந்தரனார் ஈ) கல்யாணசுந்தரம்
12. சங்கப்புலவர்கள் இறைவனையும் சேர்த்து எத்தனை புலவர்கள் இருந்தனர்?
   அ) 48 ஆ) 49 இ) 50 ஈ) 51
13. புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்கள், அலைகளால் அலைப்புண்டு கட்டுத்தறியில் கட்டப்பட்ட யானை அசைவது போல் அசைந்தன அவற்றின் உச்சியில் கொடிகள் அசைந்து ஆடின என ..................... கூறுகிறது
   அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பட்டினப்பாலை ஈ) பதிற்றுப்பத்து
14. வெண்பாவின் பொது இலக்கணக் கூற்றில் பொருந்தா ஒன்றைத் தேர்ந்தெடு
   அ) இயற்சீரும், வெண்சீரும் மட்டும் வரும்
   ஆ) இயற்சீரும் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும், வேற்றுத்தளைகள் வாரா
   இ) ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்
   ஈ) இரண்டி முதல் பத்து அடி வரை அமைந்தது வரும்
15. “அவியுணவு” இலக்கணகுறிப்பு தருக
   அ) இருபெயரொட்டு பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை
   இ) உவமைத்தொகை ஈ) பண்புத்தொகை
16. தேன்மழை நூலில் எத்தனை பகுதிகளாக கவிதைகள் இடம்பெற்றுள்ளன.
   அ) 8 ஆ) 16 இ) 19 ஈ) 21
17. கல்வி வளர்ச்சி நாள் எப்போது கொண்டாப்படுகிறது?
   அ) மே 15 ஆ) ஜீன் 15 இ) ஜீலை 15 ஈ) அக் 15
18. “வரவு” இலக்கணக்குறிப்பு
   அ) பண்புப்பெயர் ஆ) ஆகுபெயர் இ) வினையாலணையும் பெயர் ஈ) தொழிற்பெயர்
19. பொருத்துக

| | | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|---|
| a. தொழிற்பெயர் | - | 1. நன்றி | | அ) | 4 | 3 | 1 | 2 |
| b. முதனிலைதிரிந்த தொழிற்பெயர் | - | 2. அகழ்வார் | | ஆ) | 3 | 1 | 4 | 2 |
| c. பண்புப்பெயர் | - | 3. சுடு | | இ) | 1 | 2 | 3 | 4 |
| d. வினையாலணையும் பெயர் | - | 4. கெடுதல் | | ஈ) | 4 | 2 | 1 | 3 |

20. சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.
   அ) அந்த பையனை நன்றாகப் படிக்க செய்தல் வேண்டும்
   ஆ) வந்தப் பையன் சொன்னச் செய்திகளைப் பொறுமையாகக் கேட்டல் வேண்டும்
   இ) அந்தச் சாலை மிக செம்மையாக காணப்படுகிறது
   ஈ) பார்த்துப் பார்த்துக் கேட்டுக்கேட்டு மகிழ்ந்தான்
21. கீழ்க்காணும் கூற்றில் தவறானவற்றைத் தேர்ந்தெடு
   அ) மூவேந்தர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் முத்தொள்ளாயிரம் ஆகும்.
   ஆ) இந்நூல் புறத்திரட்டு வாயிலாக 22 வெண்பாவும், பழைய உரைநூல்களில் மேற்கோள்களாக 108 வெண்பாவும் கிடைத்துள்ளன.
   இ) மூவேந்தர்களின் ஆட்சிச்சிறப்பு, படைச்சிறப்பு, போர்த்திறன், கொடை முதலிய செய்திகளை இப்பாடல்கள் விளக்குகின்றன.

ஈ) இந்நூல் சிறந்த இலக்கிய நயமும் கற்பனை வளமும் நிறைந்த நூலாகத் திகழ்கிறது.

22. "நவ்வி" இச்சொல்லின் பொருள் யாது?
அ) மான் ஆ) நாய் இ) நரி ஈ) புலி

23. "இளைஞர்களே! தமிழுலகின் இழிந்த நிலையை ஒருங்கள்; ஓர்ந்து (எண்ணி) உங்கள் பொறுப்பை உணருங்கள்" என்று கூறியவர் யார்?
அ) ரா.பி.சேதுப்பிள்ளை ஆ) விவேகானந்தர் இ) முத்துராமலிங்கத்தேவர் ஈ) திரு.வி.க

24. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
அ) 8 ஆ) 16 இ) 35 ஈ) 18

25. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.
அ) தமிழமுது ஆ) கண்மலர் இ) முகத்தாமரை ஈ) மலரடி

26. யாருடைய உதவியால் மணிமேகலை அமுதசுரபியைப் பெறுகிறாள்?
அ) காயசண்டிகை ஆ) தீவதிலகை இ) தேவந்தி ஈ) வயந்தமாலை

27. தவறானவற்றைக் தேர்ந்தெடு
அ) அறிவுண்டாக - அறிவு + உண்டாக ஆ) இயல்பீராறு - இயல்பு +ஈர் + ஆறு
இ) தொழுதேத்தி - தொழுது + ஏத்தி ஈ) எனக்கிடர் - என் + இடர்

28. தூதுவளை என்பது ஒருவகை ..................................
அ) மரம் ஆ) கொடி இ) செடி ஈ) இலை

29. "தமிழ் மருந்துகள்" என்ற நூலை எழுதியவர் யார்?
அ) வ.வே.சு.ஐயர் ஆ) கி.ஆ.பெ இ) கு.ப.ரா ஈ) தெ.பொ.மீ

30. "அயலார் தமக்கும் அன்பே செய்யும்; நாணம் கெடாமல் நட்பு கொண்டாடும்" என்று கூறியவர் யார்?
அ) உவமைக்கவிஞர் ஆ) மறுமலர்ச்சிக் கவிஞர் இ) நாமக்கல் கவிஞர் ஈ) கவிஞரேறு

31. கீழ்க்காணும் கூற்றுகளில் இராணி மங்கம்மாளைப் பற்றி தவறான கூற்றைத் தேர்ந்தெடு
அ) மதுரையை ஆண்டுவந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள்.
ஆ) மங்கம்மாளின் மகன் அரங்க கிருட்டிண முத்துவீரப்பன்.
இ) மருமகள் - சின்ன முத்தம்மாள், பெயரன் - விசயரங்க சொக்கநாதன்.
ஈ) மங்கமாளின் படைத்தளபதி சிக்கதேவராயன்.

32. சரியான கூற்றைத் தேர்ந்தெடு
1. நீ என்னும் முன்னிலை ஒருமைப்பெயர் வேற்றுமை உருபேற்கும்போது 'நின்' எனவும், 'உன்' எனவும் மாறும்.
2. நீ + ஐ = நின்னை, உன்னை, நீ + ஆல் = நின்னால், உன்னால்.
3. நீ + கு - நினக்கு, உனக்கு நீ + இன் = நின்னின், உன்னின்.
4. நீ + அது = நினது, உனது, நீ + கண் = நின்கண், உன்கண்.
அ) 1, 2 சரி ஆ) 2, 3 சரி இ) 3, 4 சரி ஈ) அனைத்தும் சரி

33. பொருத்துக
a. இயல்புப் புணர்ச்சி - 1. கற்கோட்டை
b. தோன்றால் விகாரம் - 2. மரவேல்
c. கெடுதல் விகாரம் - 3. வாழைப்பழம்
d. திரிதல் விகாரம் - 4 .பொன்வளையல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 4 | 3 | 2 | 1 |
| இ) | 2 | 1 | 4 | 3 |
| ஈ) | 1 | 4 | 3 | 2 |

34. "இருப்பாணி" இலக்கணக்குறிப்பு தருக
அ) தோன்றல் விகாரம் ஆ) கெடுதல் விகாரம்
இ) திரிதல் விகாரம் ஈ) வலித்தல் விகாரம்

35. கருவிப் பொருளை குறிக்காமல், அதனின் தோன்றிய காரியத்திற்கு ஆகி வருவது என்ன வகைப்பெயர்?
அ) கருவியாகுபெயர் ஆ) காரியவாகுபெயர் இ) கருத்தாவாகுபெயர் ஈ) உவமையாகுபெயர்

36. "செல்வத்துப் பயனே ஈதல்" என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடியவர் யார்?
அ) மோசிகீரனார் ஆ) ஔவையார் இ) குடப்புலவியனார் ஈ) நக்கீரர்

37. பொருத்துக
a. 2 சீர்கள் - 1. சிந்தடி
b. 4 சீர்கள் - 2. குறளடி
c. 3 சீர்கள் - 3. நெடிலடி
d. 5 சீர்கள் - 4. அளவடி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 2 | 4 | 1 | 3 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 2 | 1 | 3 | 4 |

38. கீழ்க்காண்பனவற்றுள் பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு
அ) பவளம் ஆ) முத்து இ) மாணிக்கம் ஈ) கிளிஞ்சல்

39. செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும் இஃது .......................... எனப்படும்
அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை இ) செய்யுளிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை

40. பொருத்துக
a. விழைவதூஉம் - 1. செய்யுளிசை அளபெடை
b. எஃஃகிலங்கிய - 2. சொல்லிசை அளபெடை
c. உரனசைஇ - 3. இன்னிசை அளபெடை
d. அழாஅ அல் - 4 ஒற்றளபெடை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 2 | 4 | 1 |
| இ) | 3 | 4 | 2 | 1 |
| ஈ) | 1 | 2 | 4 | 3 |

41. "பாரதர்தந் நாட்டிலே நாசமெய்தப் பாவியேன் துணைபுரியும் பான்மை யென்னே!" என்று பாடியவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) நாமக்கல் கவிஞர் ஈ) சுரதா
42. "மணிக்கொடி" என்னும் இதழில் புதுக்கவிதை எழுதியவர்களுள் தவறானவற்றைத் தேர்ந்தெடு
அ) ந.பிச்சமூர்த்தி ஆ) புதுமைப்பித்தன் இ) சி.சு.செல்லப்பா ஈ) க.நா.சுப்பிரமணியன்
43. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. பொருட்பெயர் பகுபதம் | - 1. சென்னையான் | | அ) | 4 | 3 | 2 | 1 |
| b. இடப்பெயர் பகுபதம் | - 2. மூக்கன் | | ஆ) | 3 | 1 | 4 | 2 |
| c. காலப்பெயர் பகுபதம் | - 3. பொன்னன் | | இ) | 1 | 4 | 3 | 2 |
| d. சினைப்பெயர் பகுபதம் | - 4. சித்திரையான் | | ஈ) | 4 | 2 | 3 | 1 |

44. பெருஞ்சித்திரனார் எழுதிய பள்ளிப்பறவைகள் எனும் நூலில் உள்ள பிரிவுகளில் பொருந்தா ஒன்றைக் தேர்ந்தெடு
அ) குழந்தைகளுக்கு ஆ) குஞ்சுகளுக்கு இ) பறவைகளுக்கு ஈ) மணிமொழிமாலை
45. "சாரைப்பாம்பு" இலக்கணக்குறிப்பு தருக.
அ) அன்மொழித்தொகை ஆ) உவமைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
46. உவகை, சிறப்பு, உயர்வு, உறுதி, சினம், காரணமாக எம்மூன்று வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்
அ) திணைவழு, பால்வழு, காலவழு ஆ) பால்வழு, இடவழு, மரபுவழு
இ) காலவழு, இடவழு, மரபுவழு ஈ) இடவழு, மரபுவழு, திணைவழு
47. பாலை இறக்கு ……… ஆகுபெயர் ஆகும்.
அ) தானியாகுபெயர் ஆ) இடவாகுபெயர் இ) பொருளாகுபெயர் ஈ) சொல்லாகுபெயர்
48. "உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று பாடியவர் யார்
அ) திருமூலர் ஆ) திருஞானசம்பந்தர் இ) திருநாவுக்கரசர் ஈ) மாணிக்கவாசகர்
49. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆரள வின்றே சாரல்" என்ற பாடலடி இடம்பெற்றுள்ள நூல்
அ) திருக்குறள் ஆ) அகநானூறு இ) குறுந்தொகை ஈ) ஐங்குறுநூறு
50. இணையெதுகை என்பது ………………, ………… சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.
அ) 1, 4 ஆ) 1, 3 இ) 1,2 ஈ) 2, 4
51. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. உளவாக்கல் | - 1. அழித்தல் | அ) | 1 | 4 | 3 | 2 |
| b. நிலைபெறுத்தல் | - 2. இறைவர் | ஆ) | 3 | 1 | 4 | 2 |
| c. நீக்கல் | - 3. காத்தல் | இ) | 1 | 3 | 4 | 2 |
| d. தலைவர் | - 4. படைத்தல் | ஈ) | 4 | 3 | 1 | 2 |

52. இந்தியாவில் பேசப்படும் மொழிகளை மொழியல் அறிஞர் எத்தனை மொழிக்குடும்பங்களாக பிரித்துள்ளனர்
அ) 1 அ) 2 இ) 3 ஈ) 4
53. "இரவின் அறுவடை" என்ற நூலை எழுதியவர் யார்?
அ) ஈரோடு தமிழன்பன் ஆ) பிரமிள் இ) புவியரசு ஈ) ஜெகச்சிற்பியன்
54. உறா அர்க் குறுநோய் உரைப்பாய் - இத்தொடரில் …………… அளபெடை இடம்பெற்றுள்ளது
அ) இன்னிசை அளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
55. மெல்லின எழுத்துகள் ஆறும் ……… லிருந்து பிறக்கின்றன
அ) கழுத்து ஆ) மார்பு இ) மூக்கு ஈ) தலை
56. "வாட்டன் நன் றென்றல் வனப்பு" என்ற அடி இடம்பெற்றுள்ள நூல் எது?
அ) ஏலாதி ஆ) திரிகடுகம் இ) சிறுபஞ்சமூலம் ஈ) திருவள்ளுமாலை
57. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. பிடி | - 1. அழகு | அ) | 2 | 1 | 4 | 3 |
| b. வனப்பு | - 2. பெண்யானை | ஆ) | 1 | 4 | 3 | 2 |
| c. வீறு | - 3. இனிமை | இ) | 2 | 3 | 4 | 2 |
| d. மதுரம் | - 4. வலிமை | ஈ) | 1 | 3 | 4 | 2 |

58. "தமிழன் என்றோர் இனமுண்டுதனியே அவற்கொரு குணமுண்டு; அமிழ்தம் அவனுடைய மொழியாகும், அன்பே அவனுடைய வழியாகும்" என்று பாடியவர் யார்?
அ) கவிமணி ஆ) நாமக்கல் கவிஞர் இ) தமிழ் ஒளி ஈ) கலியாணசுந்தரம்
59. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. பொன்னன் | - 1. சினைப்பெயர் | அ) | 1 | 2 | 3 | 4 |
| b. ஊரன் | - 2. பொருட்பெயர் | ஆ) | 2 | 3 | 4 | 1 |
| c. ஆதிரையான் | - 3. இடப்பெயர் | இ) | 3 | 2 | 1 | 4 |
| d. கண்ணன் | - 4. காலப்பெயர் | ஈ) | 4 | 3 | 2 | 1 |

60. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. முகத்தல் அளவை ஆகுபெயர் | - 1. தலைக்கு ஒன்று கொடு | அ) | 2 | 4 | 1 | 3 |
| b. எடுத்தல் அளவை ஆகுபெயர் | - 2. இரண்டு லிட்டர் தா | ஆ) | 1 | 2 | 3 | 4 |
| c. எண்ணல் அளவை ஆகுபெயர் | - 3. ஆறு முழம் கொடு | இ) | 4 | 3 | 2 | 1 |

d. நீட்டல் அளவை ஆகுபெயர் - 4. பத்துக்கிலோ கொடு ஈ) 1 4 3 2

61. பாவேந்தர் பாரதிதாசனிடம் முறையாகப்பாடம் கேட்ட இவர் பாடல் இயற்றும் ஆற்றலைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டார். அவர் யார்?
அ) கண்ணதாசன் ஆ) மருதகாசி இ) தமிழ் ஒளி ஈ) பட்டுக்கோட்டைக் கலியாணசுந்தரம்

62. "வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்து" இது எந்த மன்னனைக் குறிப்பிடுகிறது?
அ) சேரர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

63. கரிகாலனின் முன்னோர் காற்றின்போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதனை .............. நூல் கூறுகிறது
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பட்டினப்பாலை ஈ) மதுரைக்காஞ்சி

64. பொருத்துக

| சீர் | | வாய்பாடு | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. கடனென்ப | - | 1. தேமா | அ) | 1 | 2 | 3 | 4 |
| b. பவர்க்கு | - | 2. பிறப்பு | ஆ) | 2 | 3 | 4 | 1 |
| c. நல்லவை | - | 3. புளிமாங்காய் | இ) | 3 | 2 | 4 | 1 |
| d. மேற்கொள் | - | 4. கூவிளம் | ஈ) | 1 | 4 | 3 | 2 |

65. "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய் சொல்" - இதில் பயின்றுவந்துள்ள அணியைக் குறிப்பிடுக
அ) வேற்றுமையணி ஆ) எடுத்துக்காட்டு உவமையணி இ) உவமையணி ஈ) தொழுலுவமையணி

66. "மெய்கண்டான் புத்தகச்சாலை" எனும் நூலகத்துடன் தொடர்புடையவர் யார்
அ) காமராசர் ஆ) அண்ணா இ) வரதராசனார் ஈ) செண்பகராமன்

67. கீழ்க்காணும் கூற்றில் மு.வரதராசனார் கூறாதவனவறைத் தேர்ந்தெடு
அ) தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தவல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்க்காலம் இல்லை என நம்பு.
ஆ) ஆட்சிமொழி என்றால் சட்டசபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும்.
இ) ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற செம்மொழியைப் போற்று.
ஈ) ஏழை என்றும் அடிமை என்றும் இல்லை எவருமில்லை சாதியில்.

68. தொழிற்பெயரைப் பற்றி பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.
அ) தொழிலுக்கு பெயராய் வரும் ஆ) மூவிடங்களிலும் வரும்
இ) படர்க்கை இடத்தில் வரும் ஈ) காலங்காட்டது

69. வழா நிலை எத்தனை வகைப்படும்
அ) 3 ஆ) 4 இ) 6 ஈ) 5

70. "ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்த நாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றைப் பொருத்தே அமைகிறது" என்று கூறியவர் யார்?
அ) மு.வரதராசனார் ஆ) பெரியார் இ) அம்பேத்கர் ஈ) விவேகானந்தர்

71. சேர மன்னரின் அடையாளச் சின்னம்
அ) வில் ஆ) புலி இ) மீன் ஈ) தாமரை

72. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி" என்று கூறும் நூல்
அ) இலக்கணவிளக்கப் பாட்டியல் ஆ) பன்னிரு பாட்டியல் இ) தண்டியலங்காரம் ஈ) மாறனலங்காரம்

73. வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழ்மொழியிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என வற்புறுத்தியவர் யார்?
அ) இரா.பி.சேதுப்பிள்ளை ஆ) ஆறுமுகநாவலர் இ) திரு.வி.க ஈ) வீரமாமுனிவர்

74. தயிரை இறக்கு இத்தொடர் .................. ஆகுபெயர் ஆகும்
அ) இடவாகுபெயர் ஆ) தானியாகுபெயர் இ) பொருளாகுபெயர் ஈ) சொல்லாகுபெயர்

75. "பைந்தமிழ் ஆசான்" எனப் போற்றப்படுபவர் யார்?
அ) ஆறுமுக நாவலர் ஆ) இரா.பி.சேதுப்பிள்ளை இ) கா.நமச்சிவாயர் ஈ) வீரமாமுனிவர்

76. "தேவியும் ஆயமும் சித்திரா பதியும்மாதவி மகளும் மாதவர்க காண்டலும்" என்று கூறும் நூல் எது?
அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) சீவகசிந்தாமணி ஈ) குண்டலகேசி

77. கீழ்க்காணும் கூற்றில் பொருந்தாதவற்றைத் தேர்ந்தெடு
அ) மணிமேகலையை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
ஆ) மதுரை என்னும் ஊரில் பிறந்து திருச்சியில் சீத்தலை என்னும் ஊரில் வாழ்ந்தவர்
இ) இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர். தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளர்.
ஈ) காலம் கி.பி 2 ஆம் நூற்றாண்டு

78. வள்ளலார் தூதுவளையை எவ்வாறு போற்றுகிறார்?
அ) தூதிலை ஆ) சிங்கவல்லி இ) ஞானப்பச்சிலை ஈ) தூதுவளை

79. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. கடன் | - | 1. உலகம் | அ) | 1 | 2 | 3 | 4 |
| b. ஒப்புரவு | - | 2. பகைவர் | ஆ) | 4 | 2 | 3 | 1 |
| c. மாற்றார் | - | 3. உதவுதல் | இ) | 4 | 3 | 2 | 1 |

d. ஊழி - 4. கடமை ஈ) 3 2 4 1

80. நாமக்கல் கவிஞர் இயற்றிய "பெண்மை" என்னும் பாடல் அவரின் எந்த கவிதை தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
அ) தேசியமலர் ஆ) தமிழ்த்தேன் மலர் இ) குடும்பமலர் ஈ) சமுதாய மலர்

81. இராணி மங்காம்மாள் "தஞ்சை - மதுரை" கூட்டுப்படை ஒன்றை உருவாக்க காரணம் என்ன?
அ) திருவிதாங்கூர் போர் ஆ) தஞ்சைப்போர் இ) மைசூர்போர் ஈ) மராத்தியப்போர்

82. "நீர்" என்னும் முன்னிலைப் பெயர் பற்றி தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு
அ) நீர் + ஐ = நும்மை ஆ) நீர் + ஆல் = நும்மால்
இ) நீர் + இன் = நும்மின் ஈ) நீர் + கண் = நுன்கண்

83. கன்று + ஆ என்பது .............. எனப் புணரும்
அ) கற்றா ஆ) கன்றா இ) கறா ஈ) அனைத்தும் தவறு

84. "கனிவாய்" இலக்கணகுறிப்பு தருக
அ) உருவகம் ஆ) உவமைத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) உவமைத்தொடர்

85. காரியப்பொருள் கருவிப்பொருளுக்கு ஆகிவருவது
அ) கருவியாகுபெயர் ஆ) காரியவாகுபெயர் இ) கருத்தாவாகுபெயர் ஈ) உவமையாகுபெயர்

86. பொருத்துக
a. துய்ப்பேம் - 1. தொழிற்பெயர்
b. நாழி - 2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
c. கல்லா ஒருவற்கும் - 3. ஆகுபெயர்
d. ஈதல் - 4. தன்மைப் பன்மை வினைமுற்று

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| அ) | 4 | 3 | 2 | 1 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 |
| இ) | 1 | 4 | 3 | 2 |
| ஈ) | 4 | 2 | 1 | 3 |

87. "அடி" எத்தனை வகைப்படும்
அ) 4 ஆ) 6 இ) 5 ஈ) 8

88. "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடல் அடி இடம்பெற்றுள்ள காண்டம் எது
அ) பால காண்டம் ஆ) அயோத்தியா காண்டம் இ) ஆரண்ய காண்டம் ஈ) சுந்தர காண்டம்

89. பொருத்துக
a. செய்யுளில் ஓசை குறைந்தால் மெய்யெழுத்துக்கள் அளபெடுக்கும் - 1. இன்னிசை அளபெடை
b. செய்யுளில் இசையை நிறைக்க வரும் அளபெடை - 2. சொல்லிசை அளபெடை
c. செய்யுளில் ஓசை குறையாவிட்டாலும் ஓசைக்காக அளபெடுக்கும் - 3. செய்யுளிசை அளபெடை
d. பெயர்ச்சொல் அளபெடுத்து வினையெச்சப் பொருளில் வரும் அளபெடை - 4. ஒற்றளபெடை
அ) 4 1 2 3 ஆ) 3 4 1 2 இ) 4 3 1 2 ஈ) 2 3 4 1

90. "கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை" எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலில் பயின்று வந்துள்ள அணியைக் குறிப்பிடுக
அ) சொல்பின்வருநிலையணி ஆ) பொருள்பின்வருநிலையணி
இ) உவமைபின்வருநிலையணி ஈ) சொற்பொருள்பின்வருநிலையணி

91. யாருடைய பாடல்களில் வரலாற்றுச் செய்திகளும், இலக்கண விளக்கங்களும் இடையிடையே கலந்து வருகின்றன
அ) நாமக்கல் கவிஞர் ஆ) மீரா இ) சுரதா ஈ) வாணிதாசன்

92. "எழுத்து" என்னும் இதழில் புதுக்கவிதை எழுதியவர்களுள் தவறான ஒன்றைத் தேர்ந்தெடு
அ) எஸ்.வைத்தீஸ்வரன் ஆ) தருமு சிவராமு இ) மணி ஈ) கு.ப.ராசகோபாலன்

93. கீழ்க்காண்பனவற்று "ஆகுபெயர்" அல்லாதது எது
அ) ஒரு மாம்பழம் கொடு ஆ) ஒன்று கொடு இ) நாலு கிலோ தா ஈ) இரண்டு லிட்டர் தேவை

94. திருவிளையாடற்புராணத்தில் "தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்" எந்த காண்டத்தில் வந்துள்ளது
அ) மதுரைக்காண்டம் ஆ) கூடற்காண்டம் இ) திருவாலவாய்க்காண்டம் ஈ) வஞ்சிக்காண்டம்

95. பொருத்துக.
a. ஆன்ற பெருமை - 1. தொழிற்பெயர்
b. ஒழுக்கம் - 2. எண்ணும்மை
c. அவியினும் வாழினும் - 3. இழிவுச் சிறப்பும்மை
d. வயிற்றுக்கும் - 4. பெயரெச்சம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 4 | 1 | 2 | 3 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

96. வல்லினம் மிகும் இடங்களைப் பற்றியதில் பொருந்தா ஒன்றைத் தேர்ந்தெடு
அ) முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்
ஆ) வன் தொடர்குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்
இ) அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின்பின் வல்லினம் மிகும்
ஈ) சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்

97. "வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனிது" இத்தொடர்

அ) பொருளாகுபெயர் ஆ) சொல்லாகுபெயர் இ) தானியாகுபெயர் ஈ) இடவாகுபெயர்

98. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a. பாரி பாரி | - | 1. கலித்தளை | அ) | 1 | 2 | 3 | 4 |
| b. பலர்புகழ் கபிலர் | - | 2. வெண்சீர் வெண்டளை | ஆ) | 4 | 3 | 2 | 1 |
| c. யாதானும் நாடாமல் | - | 3. நிரையொன்றாசிரியத்தளை | இ) | 3 | 1 | 2 | 4 |
| d. தாமரைப்பூ குளத்தினிலே | - | 4. நேரோன்றாசிரியத்தளை | ஈ) | 4 | 2 | 1 | 3 |

99. குறுந்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை

அ) 601 ஆ) 501 இ) 401 ஈ) 301

100. கீழ்க்காண்பனவற்று தவறான ஒன்றைத் தேர்ந்தெடு

அ) சமஸ்தானம் - அரசு ஆ) அப்பாயிண்ட் - பணி அமர்த்துதல்

இ) உத்தியோகஸ்தர் - அலுவர் ஈ) கஜானா - பணப்பெட்டி



9TH TAMIL ANSWER KEY :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| B | C | B | C | A | A | B | C | D | B |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| A | B | C | D | A | B | C | D | A | B |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| B | A | D | B | D | B | D | B | B | C |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| D | B | B | D | A | D | B | C | A | C |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| B | C | B | A | D | A | A | A | C | C |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| D | D | C | B | C | C | A | B | B | A |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| D | C | B | C | C | A | D | B | C | D |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| A | B | C | B | C | A | B | C | C | D |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| C | D | B | B | B | A | C | A | C | D |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| C | D | A | C | B | C | B | B | C | D |

SANTHANA TNPSC